**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

O.S.No. 124/2024 **நாள்– 14.11.2024**

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1 ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவானந்தம் | தாலுகா | விருதுநகர் |
| த–பெ | கிருஷ்ணன் | தொழில் | தகவல் தொழில் நுட்பத்தில் வேலை |
| கிராமம் | விருதுநகர் | வயது | 38 |

**முதல் விசாரணை**

எனது முதல் விசாரணையை பொறுத்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். 21.10.2013ம் தேதி 1வது தபசில் சொத்தை வாதி பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவண எண்.8351/2013 சார்பதிவாளல் நகல் (இதன் அசல் ஆவணம் எல்.ஐ.சி நிறுவனத்தில் அடமானத்தில் உள்ளது) **வாசாஆ.1**. 1ம் தபசில் சொத்துக்கு எனது பெயரில் ஏற்பட்ட தீர்வை ரசீதுகள் **வாசாஆ.2**. 1ம் பிரதிவாதி என் மீது மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரில் தாக்கல் செய்த அ.வ.எண்.109/2023 வழக்கின் வழக்குரை சான்றிட்ட நகல் **வாசாஆ.3**. 15.10.2020 தேதியிட்டு வாதி பிரதிவாதி மீது கொடுத்த புகாருக்கான புகார் மனு ஏற்புரை ரசீது **வாசாஆ.4**. TN 33 BQ 9369 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ் ஒளி நகல் **வாசா.ஆ.5.** பி.ஈ கம்பியூட்டர் சைன்ஸ் படிப்பிற்கான மதிப்பெண் சான்றிதழ் **வாசாஆ.6.** ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் ஒளிநகல் **வாசாஆ.7.** பன்னாரிஅம்மான் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி வழங்கி கோர்ஸ் கம்பீளிசன் சான்றிதழ் ஒளிநகல் **வாசாஆ.8**.(வாசாஆ.5 முதல் 8 வரையிலான ஆவணங்களின் அசல் பிரதிவாதிகள் வசம் உள்ளது.) 08.03.2024ம் தேதியிட்டு வாதி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் **வாசாஆ.9**. வாசாஆ.9 அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வாசாஆ.10.** 06.04.2024 தேதியிட்டு பிரதிவாதிகள் வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு **வாசாஆ.11**. வாதி பெயரில் உள்ள எல்.ஜி டிவிக்கான பில் **வாசாஆ.12.**

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 14th day of November 2024.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.